| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 14.07.2026 | |
| CC No. 191 /2025 | |
| சாட்சி :PW4 | |
| பெயர் : திருமதி. சந்திரா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அழகுமுருகன் | தொழில் : நர்சு வேலை |
| கிராமம் : மணப்பாறை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 42/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் நர்சிங் படித்துள்ளேன். நான் நர்சிங் செய்து வருகிறேன். அ.சா.1 சரண்யா எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எனது தங்கை 02.07.2022 அன்று வாந்தியாக வருவதாகவும் எனது பெற்றோரிடம் சொல்லி எனது பெற்றோர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். நான் அதனால் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று காண்பிக்கும்படி கூறினேன். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் எனது தங்கை 5 மாதம் கர்ப்பிணியாக இருப்பதாக கூறியதாக எனது பெற்றோர்கள் என்னிடம் கூறினார். எனது தங்கை கர்ப்பமாக இருப்பது வெளியில் தெரிந்தால் அசிங்கமாகிவிடும் என்பதால் அந்த குழந்தையை அபாசன் செய்துவிடும்படி எனது பெற்றோர்கள் மருத்துவரிடம் கேட்டார்கள். ஆனால் மருத்துவர்கள் நாங்கள் முறையாக காவல்துறைக்கு தகவல் கொடுக்குபடி கூறினார்கள். தொடர்ந்து எனது தங்கையிடம் இது குறித்து கேட்ட போது அவர் முதலில் சொல்ல மறுத்து பின்னர் தனது கர்ப்பத்திற்கு காரணம் எதிர் வீட்டில் உள்ள நடராஜன் அண்ணன் தான் என்று அவர்தான் என்னை கட்டாயப்படுத்தியும், பலமுறை தொந்தரவு செய்து ஆசைவார்த்தி கூறி என்னை நம்பவைத்து உடலுறவு கொண்டதாகவும் அதனால் கர்ப்பமடைந்ததாகவும் கூறினார். 10.02.2022 அன்று மதியம் 01.00 மணியளவில் யாரும் வீட்டில் இல்லாத

நேரத்தில் என்னிடம் வற்புறுத்தி உடலுறவு வைத்துக்கொண்டார். அதனால் நான் கருவுற்றதாகவும் கூறினார். தொடர்ந்து அதனை வெளியே சொன்னால் உனது பெற்றோரையும் உன்னையும், வெட்டி கொன்றுவிடுவேன் என்று ஆஜர் எதிரி மிரட்டியதால் எனது தங்கை நடந்ததை வெளியே சொல்லாமல் பயந்து இருந்துள்ளார். 16.07.2022 அன்று மணப்பாறை மகளிர் காவல்நிலையத்தில் இது தொடர்பாக எனது தங்கை புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. எங்கள் குடும்பத்தில் என்னோடு சேர்த்து நான்கு பேர் என்றால் ஆமாம். நான் 15 வருடத்திற்கு முன்பாக திருமணம் நடந்து மணப்பாறைக்கு சென்றுவிட்டேன் என்றால் ஆமாம். நான் வேறு ஜாதியில் திருமணம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனது தங்கை சொல்லித்தான் இந்த சம்பவமே எனக்கு தெரியும் என்றால் ஆமாம். எனது பெற்றோர்கள், நான், எனது தங்கை ஆலிப்பட்டியில் தோட்டம் போட்டு அங்கு வேலை பார்த்து வருகிறாம் என்றால் ஆமாம். சொந்தஊர் சின்னஉடையாப்பட்டி என்றால் ஆமாம். சின்னஉடையாப்பட்டிக்கும் ஆலிப்பட்டிக்கும் இடையே 3 கி.மீ துாரம் என்றால் ஆமாம். காலையிலிருந்து மாலை வரை ஆலிப்பட்டியில் இருப்பார்கள், இரவுசின்ன உடையாப்பட்டிக்கு சென்றுவிடுவார்கள்.

3. ஆஜர் எதிரி ஒரே இனத்தை சேர்ந்தவர், எனக்கு அண்ணன் உறவு முறை என்றால் ஆமாம். எனது தங்கை 02.07.2022 அன்று வாந்தி எடுத்து எனக்கு கூப்பிட்டு சொன்னாரா என்றால் எனது அம்மாவிடம் சொன்னார். நான் திருச்சி அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் ஆமாம். 02.07.2022 அன்று தான் எனது தங்கையை மருத்துவ பரிசோதனை செய்தார்கள் என்றால் ஆமாம். அன்றைக்கே 5 மாதம் கர்ப்பமாக இருப்பதாக மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள் என்றால் ஆமாம். அப்போது எனது தங்கையிடம் எனது பெற்றோர்கள் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள், எனது தங்கை சொல்லவில்லை. இது சம்மந்தமாக காவல்நிலையம் சென்றோமா என்றால் 03.07.2022 ம் தேதி காவல்நிலையம் சென்று சொன்னோம்.

4. ஆஜர் எதிரி மீது வீண் பழியை சுமத்தி எனது தங்கை கர்ப்பத்திற்கு நடராஜன் காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு இடது கை இல்லாதவர் என்று சொன்னால் சரிதான். எனது தங்கையிடம் ஆஜர் எதிரி உடலுறவு வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதாரவாக நான் அவருக்கு ஆதாரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கும், நடராஜனுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது வீட்டிற்கு அடிக்கடி செல்வேனா என்றால் செல்வேன். எனது கணவர் செல்வாரா என்றால் வரமாட்டார். எனது தங்கை கர்ப்பத்திற்கு நடராஜன் காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல.

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் போலீசார் எழுதிக்கொடுத்த புகாரில் எனது தங்கை கையெழுத்து செய்துள்ளார் என்றும் அவர்களே இந்த தேதியில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று சொல்லி எனது தங்கையிடம் கையெழுத்து வாங்கி ஆஜர் எதிரியை குற்றவாளியாக ஜோடிக்கப்பட்டுள்ளார் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.